DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **S.C.54/2025**
Prosecution Witness P.W. 23

| | |
|---|---|
| Name: **திரு.வினித்குமார்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

A4 எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்

**நாள்: 14.07.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தேனி, டொம்புச்சேரியில் குடியிருந்து வருகிறேன். நான் திருப்பூர், STR கார்மெண்ட்ஸ்–ல் அட்மின் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த ஆகஸ்ட்–2025ம் மாதத்தில் ஒரு இருசக்கர வாகனத்தை கார்த்திக் என்பவரிடம் ரூ.20,000/–க்கு அடமானமாக வாங்கியிருந்தேன். நான் அடமானமாக வாங்கிய மாதத்திலேயே எனது வீட்டிற்கு போலிசாரும், பைனான்ஸ்காரர்களும் வந்தனர்.

2. என்னிடம் அடமானமாக வாங்கிய வாகனத்தில் சந்தேகம் உள்ளதென்றும், அந்த வாகனத்தை தரும்படி கேட்டு வாகனத்தை போலிசார் பெற்றுக் கொண்டனர். இதுபற்றி நான் கேட்டதற்கு வாகனம் தொடர்பாக ஒரு பிரச்சினை உள்ளதாக கூறி வாங்கி சென்றனர், இரண்டு நாட்களுக்கு பிறகு தான் கொலை சம்பவம் பற்றி நான் கேள்விப்பட்டேன். கார்த்திக் என்பவரை வேறொரு நண்பர் மூலமாக எனக்கு தெரியும்.

3. கார்த்திக் என்பவர் எனது கம்பெனியில் ஒரு வாரமாக வேலை செய்தார், அந்த கார்த்திக் மீது தான் சந்தேகம் எனக்கூறி எனது இருசக்கர வாகனத்தை வாங்கி சென்றனர். பிறகு போலிசார் என்னை விசாரணைக்கு அழைத்தனர், நான் நடந்த விபரங்களை கூறினேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்ட விபரம் போலிசார் என்னை அழைத்த பிறகு தான் தெரியுமென்று சொன்னால் சரிதான். நான் குறிப்பிடும் இருசக்கர வாகனத்தினை பைனான்ஸ் சம்பந்தமாகத்தான் என்னிடம் போலிசார் வாங்கி சென்றனர் என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனத்தினை அடமானமாக பெற்றதற்கான ஒப்பந்தம் ஏதும் போடவில்லை. எனக்கு இந்த வழக்கு பற்றி விபரங்கள் தெரியாதென்றால் சரிதான். போலிசார் என்னை அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR
Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.07.14 16:25:55 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.